சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை-37-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2010-2011 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரங்கம் அமைத்து பங்கு பெறுவதற்கான செலவுத் தொகை ரூ. 1,30,000/- ரூபாய் (ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–3)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.83

நாள்: 11.08.2010
ஆடி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.143, சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு3)த் துறை நாள் 13.07.2010.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்ககம், சென்னை–15, ந.க.எண்.56793/2010/என்.இ.எம்–1 நாள் 22.07.2010.

----

ஆணை:

மேலே 1-ல் படிக்கப்பட்டவையில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் 37-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு அனுமதியும் அதற்கான செலவுத் தொகை ரூ.1,30,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)க்கு ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையினை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகள் துறை தலைவர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப் பெறுவதை எதிர்பார்த்து அனுமதித்து ஆணை வெளியிடுமாறு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை கேட்டுக் கொண்டது.

2.மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கான அனுமதி அளிக்கப்பட்ட ரூ1,30,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தொகையை 37-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரங்கம் அமைத்து பங்கேற்பதற்கு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. மேலும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளுமாறும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(த.பி.பா)

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2515- 00 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் - 001 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் -I- திட்டத்தில் சேராதது –AA- ஊரக வளர்ச்சி இயக்ககம் 08 விளம்பரமும் பிரச்சாரமும் - 02 - பொருட்காட்சி"

(ததொகு – 2515-00-001-AA-0824)

4. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.137/இசெ(பூமா)/10 நாள் 6.08.2010 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர், சென்னை – 9/18/35.

<u>நகல்</u>
அரசு செயலாளர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை-9
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை-2
நிதி (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி)த் துறை, சென்னை-9
இருப்பு கோப்பு
உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.